DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 186/ 2019 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 13 |
| Name | : டாக்டர். மணிகண்டன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.06.2025.

--------

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை, அரசு ராஜாஜி மருத்துவமனையில் பொது மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். 2018ம் ஆண்டு உசிலம்பட்டி, அரசு மருத்துவமனையில் வேலை பார்க்கும்போது 27.12.2018ம் தேதி பணியில் இருந்தபோது காலை 6.50 மணியளவில் 70 வயது மதிகத்தக்க சின்ன சிவனாண்டி மகன் தங்கமுடி என்பவர் என்னிடம் சிகிக்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவரை விசாரித்தபோது அவர் காலை 5.00 மணியளவில் சீல்நாயக்கன்பட்டி மாரியம்மன் கோயில் அருகில் உள்ள டீக்கடை அருகில் 6 தெரிந்த நபர்கள் தன்னை அரிவாளால் தாக்கியதாக கூறினார். 15 நிமிடங்கள் சுயநினைவு இல்லாமல் இருந்ததாக சொன்னார். அவரை பரிசோதித்தபோது தலையின் முன்பக்கம் கிழிந்த நிலையில் 10x1 செ.மீ அளவிலான காயம் இருந்தது. கழுத்தின் பின்பகுதியில் 3x1 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சையளித்து தலையில் ஏற்பட்ட காயத்திற்காக மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு அவருக்கு மருத்துவர் லட்சுமிநாராயணன் அவர்கள் சிகிச்சை அளித்துள்ளார்.

மேற்படி மருத்துவரின் கருத்துரையின் படி காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயங்கள் சிறிய காயம் என சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று அ.சா.ஆ.2. இதுசம்மந்தமாக உசிலம்பட்டி காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி காயங்கள் மேற்படி டீக்கடையில் உள்ள மூங்கில் மரங்களில் கொப்புகள் விழுந்து ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் காயம்பட்டவருக்கு கழுத்தின் பின்பக்கத்தில் ஏற்பட்ட காயம் ஏற்பட்ட வாய்ப்பு உண்டு. முன்பக்க தலையில் காயம் கிழே கூரான ஆயுதத்தின் மீது விழும்போது ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் உண்டு.

ம.வி.இல்லை.

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சுசெய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால கையொப்பம் இடப்பட்டது

ஒம் / P.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி